# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2, தியாகராயர் சாலை (ஆலையம்மன் கோயில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு,
தேனாம்பேட்டை, சென்னை - 600 018. தொலைபேசி எண். 24347590

**ஆணை நாள்: 24.09.2019 (முற்பகல்)**

**முன்னிலை**

**திரு ச. த. தமிழ்குமார், பி.ஏ., பி.எல்.,**

**மாநில தகவல் ஆணையர்**

..............

**வழக்கு எண்.SA5152/F/2019**

திரு A. ஸ்ரீமுருகன் ... மேல்முறையீட்டாளர்

எதிர்

பொதுத் தகவல் அலுவலர்/
மாநகர் போக்குவரத்துக் கழகம் (சென்னை)
வரையறுக்கப்பட்டது,
பல்லவன் இல்லம்,
அண்ணா சாலை,
சென்னை - 600 002. ... பொது அதிகார அமைப்பு

பார்வை:-

| | |
|---|---|
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1) கீழ் மனு செய்த நாள் | 07.04.2019 |
| முதல் மேல்முறையீட்டு நாள் - பிரிவு 19(1) | 11.05.2019 |
| மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனு - பிரிவு 19(3) | 03.06.2019 |

******

## ஆணை

இன்று (24.09.2019) இவ்வாணையத்தில் நடைபெற்ற விசாரணைக்கு மனுதாரர் திரு A. ஸ்ரீமுருகன் மற்றும் பொது அதிகார அமைப்பின் சார்பாக திரு S.பாலசுப்ரமணியன், உதவி மேலாளர், மாநகர் போக்குவரத்துக் கழகம் (சென்னை) வரையறுக்கப்பட்டது, பல்லவன் இல்லம், அண்ணா சாலை, சென்னை ஆகியோர் ஆஜரானார்கள்.

2. மேல்முறையீட்டாளர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் 07.04.2019 தேதியிட்டு தாக்கல் செய்துள்ள மனுவில், சென்னை மாநகர போக்குவரத்துக் கழகத்திற்கு உட்பட்ட அடையாறு பணிமனையில் தற்போது வரை பணி செய்து வரும்

ஓட்டுநர், நடத்துநர் பெயர், பணி எண், மொத்த விபரம் வழங்கவும், பணியாளர்களின் வருகைப் பதிவேடு குறித்த தகவல், இரட்டிப்பு பணி செய்த ஓட்டுநர் மற்றும் நடத்துநர் விபரம் மற்றும் தற்போது பணியிலிருக்கும் பயணச்சீட்டு பரிசோதகர்கள் மற்றும் TI ஓட்டுநர் பயிற்சியாளர் மொத்த விபரம், பெயர், பணி எண், பணியில் சேர்ந்த நாள், பணியிலிருந்து ஓய்வு பெரும் நாள் போன்ற தகவல்களை வழங்கக்கேட்டு, பொதுத் தகவல் அலுவலர், மாநகர் போக்குவரத்துக் கழகம், பல்லவன் இல்லம், பல்லவன் சாலை, சென்னை என விலாசமிட்டு விண்ணப்பித்துள்ளார்.

3. பொதுத் தகவல் அலுவலர் 29.04.2019 தேதியிட்டு தகவல் வழங்கியுள்ளார். தான் கோரிய தகவல் வழங்கப்படவில்லை என தெரிவித்தும், அத்தகவலை அளிக்கக் கேட்டும், 11.05.2019 தேதியிட்ட முதல் மேல்முறையீட்டு மனுவை பிரிவு 19(1)ன் கீழ் முதல் மேல்முறையீட்டு அலுவலருக்குத் தாக்கல் செய்துள்ளார். 16.05.2019 தேதியிட்டு மேல்முறையீட்டு அலுவலர் தகவல் வழங்கியுள்ளார். திருப்தியடையாத மேல்முறையீட்டாளர், தான் கோரிய தகவல் வழங்கப்படவில்லை என தெரிவித்தும், முழுமையான தகவல்களை அளிக்க ஆணையிட கேட்டும், பிரிவு 19(3)ன் கீழ் 03.06.2019 தேதியிட்ட இரண்டாவது மேல்முறையீட்டு மனுவை மேல்முறையீட்டாளர் இவ்வாணையத்தில் தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டாளர் தாக்கல் செய்த இரண்டாவது மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான மேல்முறையீட்டாளர் தான் கோரிய தகவல்களில் தன்னுடைய வருகைப் பதிவேடுகள் குறித்த தகவல் மற்றும் தற்போது பணியிலிருக்கும் பயணச்சீட்டு பரிசோதகர்கள் மற்றும் TI ஓட்டுநர் பயிற்சியாளர் மொத்த விபரம் பெற்று வழங்குமாறு ஆணையத்தைக் கேட்டுக்கொண்டார்.

5. இன்றைய விசாரணையில் பொது அதிகார அமைப்பின் சார்பாக ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மேல்முறையீட்டாளர் கோரிய தகவல்களை வழங்குவதாகத் தெரிவித்தார்.

6. மேல்முறையீட்டாளரின் மனு மற்றும் பொதுத் தகவல் அலுவலர் வழங்கிய தகவல் ஆகியவற்றை ஆணையம் பரிசீலனை செய்து, கீழ்கண்ட உத்தரவு வழங்குகிறது:

**மனுதாரர்/மேல்முறையீட்டாளர் 07.04.2019 தேதியிட்ட மனுவில் கோரிய தகவல்களில் இனம் 6-ல் கோரிய தகவல் மற்றும் மேல்முறையீட்டாளர் தொடர்பான வருகைப்பதிவேடு நகல் ஆகிவற்றை இவ்வாணை கிடைக்கப்பெற்ற 7 தினங்களுக்குள் தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 7(6)ன்படி கட்டணமின்றி பதிவுத் தபாலில் அனுப்பி வைத்து, வழங்கப்பட்ட தகவல் மற்றும் மேல்முறையீட்டாளர் ஏற்பளிப்பு செய்த ஒப்புகை அட்டையின் நகலை இவ்வாணையத்திற்கு அனுப்பி வைக்க தற்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையம் உத்தரவிடுகிறது.**

**ஒம்/- ச.த. தமிழ்குமார்**
மாநில தகவல் ஆணையர்

(ஆணையத்தின் ஆணைப்படி)

உதவிப் பதிவாளர்

**<u>வழக்கு எண்.SA5152/F/2019</u>**

**பெறுநர்**

பொதுத் தகவல் அலுவலர்/
மாநகர் போக்குவரத்துக் கழகம் (சென்னை)
வரையறுக்கப்பட்டது,
பல்லவன் இல்லம், அண்ணா சாலை,
சென்னை - 600 002.

**<u>மனுதாரர்/ மேல்முறையீட்டாளர்</u>**

திரு A. ஸ்ரீமுருகன்,
த/பெ. C.ஆறுமுகம்,
எண்.52A/58, மாவீரன் மூர்த்தி தெரு,
அம்பேத்கர் நகர், திருமுல்லைவாயில்,
சென்னை - 600 062.

**Copy to: Judgement File/ Spare**

**AM/PS - 250919**